

# மாதவிடாய்க் கால சுகாதாரத் திட்டம்

## 2022-ஆம் ஆண்டின் ‘பருவம் 2’- இல் NSW அரச பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படுகிறது

NSW கல்வித் திணைக்களம் 2022-ஆம் ஆண்டின் இரண்டாம் பருவத்தில் இருந்து NSW அரச பாடசாலைகளில் மாணவிகளுக்கான மாதவிடாய்க் கால சுகாதார ஆதரவுதவிகளை அளிக்கிறது. பாடசாலை வாழ்க்கையில் முற்றிலுமாய்ப் பங்குபற்றுவதிலிருந்து மாணவிகளைத் தடுக்கக்கூடிய தடைகள் எதையும் குறைப்பதை இத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள்:

- திண்டுகள் (pads), ‘டேம்போன்’ கள் (tampons) போன்ற சுத்தமான பொருட்களை மாதவிடாய்க் கால சுகாதாரத் திட்டம் மாணவிகளுக்கு அளிக்கும்.
- அவ்வப்போது தவறாமல் மாற்றிக்கொள்ளக் கூடிய சுத்தமான பொருட்களை மாணவிகளுக்கு அளிப்பதன் மூலம் அவர்களுக்கு இருக்கும் சுகாதார ஆபத்துகளைக் குறைப்பது இந்தத் திட்டத்தின் நோக்கம்.
- சுத்தமான பொருட்களைப் பெறும் வசதி மாணவிகளுக்குக் கிடைக்கும் பொழுது பாடசாலையில் மற்றவர்களுடன் சேர்ந்து தமது கற்றல் நடவடிக்கைகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள அவர்களால் இயலும்.
- 2022-ஆம் ஆண்டின் ‘பருவம் 2’-இல் இருந்து, திண்டுகள் (pads) மற்றும்/அல்லது ‘டேம்போன்’கள் (tampons) ஆகிய இலவச சுகாதாரப் பொருட்களைப் பெறும் வசதியை மாணவிகளுக்கு ஒவ்வொரு பாடசாலையும் அளிக்கும்.
- இந்த சுகாதாரப் பொருட்கள் சுத்தமான ஒரு ‘விநியோகிப்பு-சாதனம்’ (dispenser) ஒன்றில் வைக்கப்பட்டிருக்கும். வசதியாகவும், சங்கட உணர்வு ஏற்படாத விதத்திலும் அணுகும் விதத்தில் இந்த சாதனங்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கும் என்பதைப் பாடசாலைகள் மாணவிகளுக்குச் சொல்லும்.
- 31 பாடசாலைகளில் இந்த சுகாதாரப் பொருட்கள் சோதிக்கப்பட்டதில் மாணவிகளும், பாடசாலை அதிபர்களும் நேர்முகமானதொரு அனுபவத்தினைக் கண்டதாகத் தெரிவித்தனர்.

உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தால், தயவு செய்து உங்களுடைய பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள்.